1989 மே 5] [திரு. துரைமுருகன்]

ரெகுலேட்டரின் 13 கதவுகளில் 2 (இரண்டு) கதவுகள் எப்போதும் திறந்தே வைக்கப்பட்டு வருகின்றன. இதனால், உட்புகும் உப்பு நீரைத் தடுக்க இந்த ரெகுலேட்டரின் மேற்பகுதியில் கிராம மக்களே ஒரு மண் அணை அமைத்துள்ளனர். இக்கரையைத் தாண்டி உப்புநீர் உட்புகுவதில்லை.

அடப்பானுக்கு, அருகில் உள்ள அடவலஞ்சான்கரை உடைப்புகளை அடைத்துக் கரையைப் பலப்படுத்தவும் முள்ளியாற்றில் தென்னாடார் கிராமத்திற்கு கீழே ஒரு கடைமடை ரெகுலேட்டர் அமைக்கவும் ஆய்வு செய்து மதிப்பீடுகள் தயாரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

3. தகவல் கோரல்

செய்தித் துறை இயக்குநரின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்ளாதது குறித்தும் பொதுப்பணித் துறைப் பணிகள் மூலமாக ஆவுடையார் கோவில் பகுதியில் சில கிராமங்களுக்குத் தண்ணீர் வரத்துப் பாதிப்பு குறித்தும்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்காக ஆவன செய்ய வேண்டுமென்பதனை நான் அவரிடத்திலே எதிர்பார்க்கிறேன். திரு. நடராஜன் அவர்கள், செய்தித் துறையில் துணை இயக்குநராக பணியாற்றுபவர். அவர் ஏற்கெனவே பதவியை விட்டு நான் விலகிக் கொள்கிறேன் என்று, ராஜினாமா செய்து விட்டேன் என்று ராஜினாமா கடிதத்தை அனுப்பி விட்டார். ராஜினாமா ஏன் ஏற்கப்படவில்லை என்கின்ற விவாதம் வருகின்றபோது அது 'ரொட்டீனாக' நடக்கிறது. சில அதிகாரிகள் பத்திரிகைகளில் இருக்கிறார்கள். சில பேர் வெளியே போய் விடுகிறார்கள். ஏன் ஏற்கப்படவில்லை என்பதற்கு அவர் வீடு கட்டுவதற்கும், கார் வாங்குவதற்கும் அரசாங்கத்திடமிருந்து 12 வருடத்திற்கான கடன் வாங்கியிருந்தார். அந்தக் கடன் திரும்பத் தரப்படவில்லை. எனவே அவரது ராஜினாமா ஏற்கப்படவில்லை என்று அரசின் சார்பிலே முதலமைச்சர் அவர்களும், செய்தித் துறை அமைச்சர் அவர்களும் அன்றைக்குப் பதில் சொன்னார்கள். அதற்கான ஒரு தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 27 ஆம் தேதியே சலான் நம்பர் 5549, 5650 ஆகியவற்றின்கீழ் ரூ. 68,000, 61,000 என்று அவர் கட்ட வேண்டிய பணத்தை கட்டி முடித்துவிட்டு, தன்னுடைய ராஜினாமா ஏற்கப்பட வேண்டுமென்ற கடிதத்தையும் 27 ஆம் தேதி துறையினுடைய செயலாளருக்கு அனுப்பியிருக்கிறார். அரசு அதை ஏற்றுக் கொண்டு,

அந்த ராஜினாமாவை அரசு ஏற்க வேண்டும். இல்லையென்றால் வேறு காரணங்களுக்காக, அரசியல் காரணங்களுக்காக அது ஏற்கப்படவில்லை என்பது போல வரும். அவர் ராஜினாமா செய்த பின், பணத்தையெல்லாம் கட்டிவிட்ட தற்குப் பின்னாலே, அவர் மேல் எந்த வழக்குமில்லை, பிரச்சினை ஒன்றுமில்லை என்ற வகையில் அந்த ராஜினாமாவை முதலமைச்சர் அவர்கள் ஏற்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அவர்களுக்கு ஒரு கோரிக்கை யாக வைக்க விரும்புகிறேன். ஏனென்றால் இது ஒரு பொதுப் பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடிதத்தையும், அவர் அனுப்பிய சலான் காப்பி ஆகியவற்றையும், மாண்புமிகு முதல்வரிடம் தருகிறேன்.

இன்னொன்று, என் தொகுதியில் இருக்கின்ற ஒரு பிரச்சினை பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் உங்களிடம் கொடுத்து ரொம்ப நாட்களாகிறது. அந்தத் துறையிலிருந்து பதில் வராத காரணத்தாலோ என்னவோ இன்னும் அது எடுத்துக் கொள்ளப் படவில்லை. 15 கிராமங்கள் ஆவுடையார் கோவில் தாலுக் காவிலே ஆர். எல். ஈ. ஜி. பி., பொதுப் பணித் துறையின் கீழே ரூ. 14 இலட்சத்திற்கு ஒரு பணி நடக்கிறது. சப்ளை கனால், ஒரு ஆறு வெட்டப்படுகிறது. 100 அடி ஆழத்திற்கு, 10 அடி அகலத்திற்கு அந்த ஆற்றை ஆழப்படுத்துகிறார்கள். அது நேரடி யாக ஒரு கிராமத்திற்கு பொன்பேத்தி என்கிற கிராமத்திற்கு மட்டும் தண்ணீர் போகின்ற வகையில் அது ஆழப்படுத்தப் படுகிறது. அதைச் சுற்றியுள்ள 15 கிராம மக்கள் அப்படி அந்த ஆற்றை ஆழப்படுத்துகிறபோது, ''எங்களுடைய 15 கிராமங் களுக்கும் தண்ணீர் போக்குவரத்து இல்லாமல் போய் இந்த 15 கிராமங்களும் பாதிக்கப்படும்'' என்று அதற்குக் கண்டனம் தெரிவித்து, அதைச் செய்யக் கூடாது என்று சொல்லி, அவர்கள் 'நோட்டீஸ்' எல்லாம் அச்சடித்துக் கொண்டிருக் கிறார்கள்.

அதையும் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன். அந்தப் பகுதியிலே 2 ஆயிரம் விவசாயிகள் அதனாலே பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. 15 கிராமங்கள் பாதிக் கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மிக முக்கியமான பிரச்சினை. அதனால்தான் ஒத்தி வைப்புத் தீர்மானமே கொண்டு வந்தோம். அங்கே பணி நடந்து கொண்டிருக்கிறது. கலெக்டரிடம் சொல்லி இருக்கிறோம். மக்களே கலெக்டரிடம் போய் ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 'அது பொதுப் பணித் துறையைச் சார்ந்தது, என்னாலே நிறுத்தமுடியாது' என்று சொல்லிவிட்டார். அந்தப் பகுதியிலே நாங்கள் கேட்பது இதனால் எல்லோரும் பயன்

1989 மே 5]   [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அடையத் தக்க வகையில் செய்ய வேண்டும் என்பதுதான். பொன் பேத்திக்கும் தண்ணீர் போகட்டும், அந்த 15 கிராமங்களுக்கும் தணணீர் போகட்டும். தண்ணீர் போவதற்கு ஒரு கட்டை கட்டி விடுவார்கள். ஒவ்வொரு ஆறாக, குளமாக, ஏரியாக நிரம்பி கடைசியில் அந்த ஊருக்குப் போகிற மாதிரி செய்வார்கள். அப்படி விட்டால் 15 கிராமங்களுக்கும் விடப்படும். ஏற்கெனவே போய்க் கொண்டிருந்த ஒரே வழிதான் அது அந்த ஊருக்கும் தண்ணீர் போக வேண்டும். இந்த ஊர்களுக்கும் தண்ணீர் போக வேண்டும். இதிலே அரசியல் ஏதும் கிடையாது. எல்லா ஊர் களிலும் எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். இந்த 15 கிராமங்களிலும் அ.தி.மு.க., தி.மு.க. எல்லோரும் இருக் கிறார்கள். பொன்பேத்தியிலும் இருக்கிறார்கள். ஆக 16 கிரா மங்களும் பயன் அடையத் தக்க விதத்திலே இந்த 14 இலட்சம் ரூபாய் திட்டம் பயன் பெற வேண்டும். இப்போது இருக்கும் நிலையில் ஒரே ஒரு கிராமம்தான் பயன்பெறும். ஆகவே அதை நிறுத்தி, அதிகாரிகளை அனுப்பிப் பார்த்து 15 கிராமங்களுக்கும் தண்ணீர் போகக் கூடிய விதத்திலே அரசு செய்ய வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத இரண்டு பிரச்சினைகளை இங்கே எழுப்பியிருக் கிறார்கள். முதலிலே எழுப்பியப் பிரச்சினை தொடர்பே உள்ள பிரச்சினை அல்ல. இருந்தாலும் இந்த அவையிலே விவாதிக்கப் பட்டு விட்ட காரணத்தால், அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சி னையை அவர் எழுப்பியிருக்கக் கூடும் என்றும், தாங்களும் அனு மதித்திருக்கக் கூடும் என்றும் நான் கருதுகிறேன்.

அரசு அலுவலர்களைப் பற்றி அவர்களுடைய பதவி நீக்கம் அல்லது அவர்களைப் பதவியிலே மீண்டும் சேர்த்துக் கொள்வது இடையிலே ஏற்பட்ட விவகாரங்கள் இவைகளைப் பற்றியெல் லாம் அவை எப்பொழுதுமே விவாதிப்பது இல்லை. இருந்தாலும் சில பொதுக் கருத்துக்களை அரசின் நிர்வாகத்தைப்பற்றி பேசும் போது எடுத்துச் சொல்வது உண்டு. அந்த வகையிலே தான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நண்பர் திருநாவுக்கரசு எடுத் துக் கூறி விட்டார் என்று நினைக்கிறேன். குறிப்பிடப்படுகிற நடராஜன் என்கிற அதிகாரி பதவி விலகல் கடிதம் கொடுத்த போது அதை ஏற்க மறுத்தது இந்த அரசு அல்ல என்பதையும், ஏற்கெனவே இருந்த கவர்னர் ஆட்சியிலேதான் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும் நான் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆனால் கடந்த 27 ஆம் தேதியன்று செலுத்த வேண்டிய அந்தத் தொகையை செலுத்தி விட்டதாகக் கூறுவதிலிருந்தே நானும் செய்தித் துறை அமைச்சர் அவர்களும் இங்கே சொ

தகவல் உண்மையானது என்பது நிரூபிக்கப்படுகிறது. ஒரு வேளை உண்மைக்கு மாறான ஒரு கருத்தை நானும் செய்தித் துறை அமைச்சரும் சொல்கிறோமோ என்ற சந்தேகம் யாருக்காவது இருந்திருக்குமானால், 27 ஆம் தேதியன்று நடராஜன் என்ற அந்த அதிகாரி அந்தப் பணத்தை எல்லாம் செலுத்தி விட்டார் என்று எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கூறுவதிலிருந்து நாங்கள் சொன்னது உண்மைதான் என்பது தெளிவான நிலைக்கு இன்றைகது உள்ளாகியிருக்கிறது.

அவர் என்னிடத்திலே சில ஆதாரக் கடிதங்களைக் கொடுத்திருக்கிறார். அதைப்பற்றி மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், அவர் பதவி விலகல் கடிதம் ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற அந்த அடிப்படையையும், மீண்டும் ஏற்றுக்கொள்ளக் கூடியசூழ்நிலை இருக்கிறதா என்றஅந்த நிலையையும் நிச்சயமாக அரசு பரிசிலனை செய்யும் என்பதை நான் அந்த முதல் பிரச்சினைக்கு விளக்கமாக அளிக்கிறேன்.

அடுத்து, 15 கிராம விவசாயிகளுடைய பிரச்சினையைப் பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். 15 கிராம விவசாயிகளுக்கு பொதுப் பணித் துறை அங்கே இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிற பணியின் காரணமாக தண்ணீர் வரத்து தடுக்கப் படுகிறது என்றும், அப்படி 15 கிராமங்களுக்கும் தண்ணீர் வருகிற வசதியையும் செய்து அங்கே அந்த அணையின் மூலமாக கொடுக்கக்கூடிய தண்ணீர் வாய்ப்பையும் பெறலாம் என்ற கருத்தினை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டு பொதுப் பணித் துறையிடமும் மாவட்டத்திலே உள்ள பொறியாளர்களிடமும், மாவட்டஆட்சித் தலைவர் அவர்களிடமும் கலந்து ஆவன செய்யப்படும் என நான் குறிப்பிடுகிறேன். ஒருவேளை நேரிலே சென்று விசாரிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால் பொதுப் பணித் துறை அமைச்சரை நான் அங்கே அனுப்பத் தயாராக இருக்கிறேன். அப்பொழுதும் நீங்கள் கருப்புக் கொடி காட்டுவீர்கள். இருந்தாலும் அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 10.20)

4. கவன ஈர்ப்பு.

(அ) ஓசூர் வட்டத்தில் சில கிராமங்களில் சாகுபடி நிலங்களிலிருந்து மக்களை வெளியேற்ற வனத்துறை நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு இந்து சமய-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.